30.10.017

தி இந்து
தமிழால் இணைவோம்

# ஆந்திரா, கர்நாடகாவில் மழை குறைந்ததால் வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு சந்தையில் காய்கறி விலை குறைந்தது



ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் கடந்த 10 நாட்களாக மழை குறைந்துள்ள நிலையில், அப்பகுதிகளில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு காய்கறி கள் வரத்து அதிகரித்து, அவற்றின் விலை சற்று குறைந் துள்ளது.

கோயம்பேடு சந்தைக்கு தமிழக பகுதிகளை விட, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்துதான் அதிக அளவில் காய்கறிகள் வருகின்றன. இதனால் அப்பகுதிகளில் நிலவும் வானிலையைப் பொறுத்து கோயம்பேடு சந்தைக்கு காய்கறிகள் வரத்தும், விலை நிலவரமும் நிர்ணயமாகிறது.

இதுதொடர்பாக கோயம்பேடு காய்கறி சந்தை வியாபாரிகளிடம் கேட்டபோது, தென்மேற்குப் பருவமழை முடிவடைந்ததால், ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலப்

பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக மழை இல்லை. இதனால் காய் கறிகள் உற்பத்தி அதிகரித்து, கோயம்பேடு சந்தைக்கு வரத்தும் அதிகரித்துள்ளது. அதனால் அவற்றின் விலை சற்று குறைந்துள்ளது என்றனர்.

**விலை விபரம்**

கோயம்பேடு சந்தையில் நேற்றைய நிலவரப்படி, கடந்த வார விலையுடன் ஒப்பிடுகையில், பல காய்கறிகளின் விலை சற்று குறைந்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.40-க்கு விற்கப்பட்ட கத்தரிக்காய், நேற்று ரூ.35 ஆக குறைந்திருந்தது.

பாகற்காய் ரூ.25-லிருந்து ரூ.20 ஆகவும், கேரட் ரூ.60-லிருந்து ரூ.55 ஆகவும், புடலங்காய் ரூ.20-லிருந்து ரூ.15 ஆகவும், முருங்கைக்காய் ரூ.160-லிருந்து ரூ.70 ஆகவும், பீன்ஸ் ரூ.80-லிருந்து ரூ.60 ஆகவும் விலை குறைத்து விற்கப்பட்டன.

இதர காய்கறிகளான வெங்காயம் கிலோ ரூ.36, சாம்பார் வெங்காயம் ரூ.110, உருளைக்கிழங்கு ரூ.16, அவரைக்காய் ரூ.70, வெண்டைக்காய் ரூ.18, முள்ளங்கி ரூ.40, முட்டைக் கோஸ் ரூ.28, பீட்ரூட் ரூ.35, பச்சை மிளகாய் ரூ.28-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்



தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து, சென்னையில் நேற்று பல இடங்களில் பரவலான மழை பெய்தது. நுங்கம்பாக்கத்தில் மழையில் நனைந்தபடி செல்லும் இருசக்கர வாகன ஓட்டிகள்.

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் கூறியதாவது:தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, இலங்கை அருகே தற்போது நிலைகொண்டுள்ளது. அதன் காரணமாக, அடுத்து வரும் 24 மணி நேரத்தில், தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும். கனமழையை பொறுத்தவரை, கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பெய்ய வாய்ப்புள்ளது.

## 5 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் கனமழை தொடர வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்



இடம்: சென்னை; படம்: எல்.சீனிவாசன்

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று தொடங்கி 5 நாட்களுக்கு கனமழை தொடர வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அக்டோபர் 30-ம் தேதி தொடங்கி நவம்பர் 5-ம் தேதி வரையிலான வானிலை முன்னறிவிப்பை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

அதன்படி,

**அக்டோபர் 30-ம் தேதி:** கடலோர தமிழகம், தமிழகத்தின் உள்மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்பிருக்கிறது.

**அக்டோபர் 31-ம் தேதி:** தெற்குக் கடலோர ஆந்திரா, ராயலசீமா, தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரளாவில் கனமழைக்கு வாய்ப்பிருக்கிறது.

**நவம்பர் 1ம் தேதி:** தெற்குக் கடலோர ஆந்திரா, தமிழகம், புதுச்சேரி, கேரளாவில் கனமழை பெய்ய வாய்ப்பிருக்கிறது

**நவம்பர் 2-ம் தேதி:** தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் கேரளாவிலும் கனமழைக்கு வாய்ப்பிருக்கிறது.

**நவம்பர் 3-ம் தேதி:** தமிழகம், புதுச்சேரி, கேரளாவில் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை வானிலை மையம் சொல்வது என்ன?**

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, இலங்கை அருகே தற்போது நிலைகொண்டுள்ளது.

அதன் காரணமாக, அடுத்து வரும் 24 மணி நேரத்தில், தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

கனமழையை பொறுத்தவரை, கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பெய்ய வாய்ப்புள்ளது எனத் தெரிவித்துள்ளது.

Weather Warning during next 5 days *

**30 October (Day 1):♦** **Heavy to very heavy rain** very likely at isolated places over coastal Tamilnadu & Pudducherry; **heavy** over interior Tamilnadu.

**31 October (Day 2):♦** **Heavy rain** very likely at isolated places over south Coastal Andhra Pradesh, Rayalaseema**,** Tamilnadu & Puducherry and Kerala.

**01 November (Day 3):♦** **Heavy rain** very likely at isolated places over south Coastal Andhra Pradesh, Tamilnadu & Puducherry and Kerala.

**02 November (Day 4):♦** **Heavy rain** likely at isolated places over Tamilnadu & Puducherry and Kerala.

**03 November (Day 5):♦** **Heavy rain** likely at isolated places over Tamilnadu & Puducherry and Kerala.